தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] சுபகிருது பங்குனி 19, 1—4—63 வார இதழ் விலை – 10 காசுகள். [இதழ் 19

வாணிபமும் ஆத்மீகமும்

[திருப்புவனம் வர்த்தகர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழாவில் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

நான் கருத்து வியாபாரம் செய்யும் ஒரு வணிகன்; எனது வணிகத்திற்கு மேடைகளே சந்தைகள்.

இன்று, நிலப்பிரபுத்துவத்திற்குச் சாவுமணி அடித்தாகிவிட்டது; பத்து ஏகர் நிலம் வைத்திருப்பவனைவிடச் சில வெண்பொற்காசுகளை வைத்து வாணிபம் செய்கிறவர்களுக்குத்தான் இன்று சிறப்பு இருக்கிறது. எந்த ஒரு துறையிலும் மனிதன் தன்னைத் தகுதிப் படுத்திக் கொள்ளும் அளவிற்குச் செழிப்பும், செழுமையும் பெறுதல் வேண்டும்.

ஆத்மீகம், எங்கோ ஒரு லகத்திற்குப் போக டிக்கட் வாங்குகிற "புக்கிங் ஆபீஸ்" அல்ல; மத உலகம் இன்று வாணிகமாகிவிட்டது. அந்த வாணிகத்திற்கு விற்பனை வரி இல்லை; வருமான வரியுமில்லை.

ஆத்மீகத்தின் அடிப்படை எண்ணம் தன்னை அறிதலாகும். ஆன்மாவைப்பற்றி அறிதல் ஆத்மீகம், அதாவது உயிரியலைப் பற்றிய அறிவு.

நான் யார்? என் உள்ளம் யார்? என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் நாம் மனிதனாக வாழ்கிறோமா, மாடாக வாழ்கிறோமா? சிங்கம் புலி கரடியாக வாழ்கிறோமா என்பதை அறிதல் வேண்டும். மனிதன் தன் குறைகளை அறிதல் இன்றியமையாததாகும்; குறைகளை அறிந்து கொள்ளுதல் திருந்துவதற்கு உதவியாக இருக்கும்.

உடலை-மூளையைப் பழக்க வழக்கப்படுத்திக் கொள்வது போல நமது மனத்தையும் நாம் நல்லதுறையில் பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும். புரியாத புதிராக இருக்கின்ற மனிதனைப் பக்குவப் படுத்தி அவனை நிறைவுடையவனுக்குவன மதம், கடவுள் நம்பிக்கை முதலியன. நாம் பல்வேறு வகையான உணவுகளையும் சாப்பிட்ட பிறகு, கொஞ்சம் ஊறுகாயைச் சாப்பிட்டால், நாம் சாப்பிட்ட எல்லாம் சீரணித்து, அந்த ஊறுகாயின் மணம் மட்டும் மேலெழுந்து நிற்பதுபோல, மதமும், கடவுள் நம்பிக்கையும் நம்மிடமுள்ள வஞ்சம், பொய், களவு, சூது, சினம் முதலியனவற்றையெல்லாம் சீரணிக்கச் செய்து அன்பையும்,

(6-ம் பக்கம் பார்க்க)

ஒருநாடு ஒழுக்கத்தில் சிறந்து நிற்பது அந்நாட்டின் ஆத்மீக வளர்ச்சியைப் பொறுத்தே

வாழ்விக்க வந்தோர் வரலாறு

15. காரைக்காலம்மையார்

(முன் தொடர்ச்சி)

திருவருளால் தீஞ்சுவைக் கனி பெற்றதாய்ப் புனிதவதியார் உரைத்ததைப் பரமதத்தன் நம்பவில்லை; திருவருள் நெறி நில்லாப் பரமதத்தன் புனிதவதியாரை நோக்கி, "தேசுடைய சடைப் பெருமான் திருவருளால் நீ அத்தீஞ் சுவைக் கனியைப் பெற்றது உண்மையானால், அத்திருவருளால் இன்னுமொரு கனியை வரவழைத்துக்கொடு பார்க்கலாம்' என்றான். புனிதவதியாரும் அவ்விடம் விட்டகன்று, திருவருளைச் சிந்தித்து, "இறைவா! இன்னுமொரு கனி ஈந்தருளல் வேண்டும்; இன்றேல் என்னுரை பொய்யாகிப்போகும்" என்று வேண்டினார். திருவருளால் மாங்கனியொன்று வந்தெய்தியது. புனிதவதியார் அந்தக் கனியைத் தன் அன்புக் கணவனிடம் கொணர்ந்து தந்தார். பரமதத்தன் பெருவியப்போடு அதனைப் பெற்றான்; உடனே அது மறைந்தது! பரமதத்தன் அஞ்சி நடுங்கினான் - அவன் உள்ளம் தடுமாறியது. புனிதவதியாரைப் பார்த்தான். 'வேறோர் அணங்கெனக் கருதினான்; இவளை விட்டு விலகுதல் வேண்டும்' என்று கருதினான். தன் கருத்தை எவருக்கும் கூறாமல், அம்மையாரோடு தொடர்பின்றி வாழத் தலைப்பட்டான்.

சிலநாட்கள் சென்றன; 'திரைகடல் கடந்து சென்று வாணிபஞ் செய்து பெரும் பொருள் திரட்டி வருவேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான். சுற்றத்தார் பலரும் சேர்ந்து மரக்கலம் ஒன்று சமைத்துத் தந்தனர். பரமதத்தன், விரும்பும் பலவகைப் பண்டங்களையும் மரக்கலத்தில் ஏற்றிக் கொண்டு, கம்மியர் சிலருடனே கடலிற் புறப்பட்டான். வாணிபம் செய்து கொண்டே பரமதத்தன் பாண்டி நாட்டிலுள்ள ஒரு துறைமுகப்பட்டினத்தைச் சேர்ந்தான். அங்கே அவன் ஒரு வாலிபப் பெண்ணை மணந்து கொண்டான்: இருவரும் இனிதே இல்லறம் நடத்தினர். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பரமதத்தன், தான் தெய்வமாகக் கருதி வழிபடும் தனது முதல் மனைவியின் பெயரை அக்குழந்தைக்கு இட்டான்.

பரமதத்தன் பாண்டிமா நாட்டில் 'அளவில் மா நிதியம் ஆக்கி அமர்ந்தினிதிருந்தான்' புனிதவதியாரின் சுற்றத்தார் இச்செய்தியைக் கேள்வியுற்றனர். புனிதவதியாரைப் பரமதத்தனிடம் கொண்டுபோய் விடுவது என்று தீர்மானித்தனர். மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில் அன்ன புனிதவதியாரை ஏற்றிப் பரமதத்தன் வாழும் பட்டினத்தைச் சென்றடைந்தனர். 'குலமுதல் மனைவியாரைக் கூட்டிக் கொண்டு வந்த செய்தியைப் பரமதத்தனுக்குத் தெரிவித்தனர். செய்தியைக் கேள்வியுற்ற பரமதத்தன் சிந்தையில் அச்சம் எய்தித், தனது மனைவியோடும் மகளோடும் விரைந்து வந்து மானிளம் பிணை போல் நின்ற மாதரசி புனிதவதியாரைத் தொழுதான். "உம்முடைய திருவருளால் நான் இனிது வாழ்கிறேன். இந்தக் குழந்தைக்கும் உமது திருப்பெயரையே சூட்டியுள்ளேன் என்று கூறிக்கொண்டே புனிதவதியாரின் காலில் விழுகிறான்; எழுகிறான்! இதனைக் கண்ணுற்ற புனிதவதியாருக்கு அச்சம் மேலிட்டது; அவர் தம்சுற்றத்தவர்பால் ஒதுங்கி நின்றார்; சுற்றத்தவர் அனைவரும் நாணமுற்றுப் பரமதத்தனைப் பார்த்து, "உன் திருமனைவி தன்னை நீ வணங்குவதென் கொலோ!" என்று கேட்டனர். உடனே பரமதத்தன் அவர்களை நோக்கி, "மானுடம் இவர் தாம் அல்லர்; நற்பெருந் தெய்வமாதல் நானறிந்தகன்ற பின்பு பெற்ற இம் மகவு தன்னைப் பேரிட்டேன்; ஆதலாலே பொற்பாதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்" என்றான். சுற்றத்தார் அனைவரும் ஏதும் புரியாமல் திகைத்து நின்றனர்.

புனிதவதியார் ஒன்றிய சிந்தையராகி, "இறைவா! ஈங்கிவன் குறித்த கொள்கைஇது; இவனுக்காகத் தாங்கிய அழகு நிரம்பிய தசைப்பொதியைக் கழித்தல் வேண்டும்; நின் தாள்கள்போற்றும் பேய் வடிவினை அடியேனுக்கு அளித்தருளல்வேண்டும்" என்று பரமன்தாள் பரவி நின்றார்; இறைவனின் திருவருள், எண்ணிய வண்ணமே கூடியது. அம்மையார், "ஊனடை வனப்பைஎல்லாம் உதறி எற்புடம்பேயாக வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும். பேய்வடிவமானார். எங்கும் மலர் மழை

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்

அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 1-4-63 [இதழ் 19

குடியரசுத் தலைவரின் அறைகூவல்

நமது பாரதக் குடியரசின் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கோயம்புத்தூர் பெரிய நாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற சமயக் கருத்தரங்கில், 'மனத்தில் புரட்சியை-அடிப்படையான மாறுதலை ஏற்படுத்தி, சமூக மறுமலர்ச்சிக்கும் மனிதப் பண்பின் மேம்பாட்டிற்கும் உதவாத மதம் உண்மையில் மதமல்ல;" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய நாகரிகத்திலும் சிறப்பாகத் தமிழ் நாகரிகத்திலும் ஊடுருவிக் கலந்து நிற்கும் பண்பு சமயப்பண்பேயாகும்; தமிழகத்தின் சமயநெறி, மனித சமுதாயத்தின் வாழ்வோடு கலந்து, மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்குத் துணை செய்த தத்துவம். தமிழகச் சமய வரலாற்றைக் கூர்ந்துநோக்கினல் அவ்வப்பொழுது சமயத் துறையில் நிகழ்ந்த புரட்சிகளே மனித சமுதாயத்தில் மாறுதலை உண்டாக்கியிருக்கின்றன. சிறப்பாக 7-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடமாடிய ஞானத்தலைவர் அப்பரடிகள், ஏற்படுத்திய மனிதப் புரட்சி அரசியல் வரலாற்றில் கூட நிகழ்ந்திராதது. ஆட்சிக்காக மக்கள் அல்ல—மக்களுக்காகவே ஆட்சி என்ற கொள்கையை முதன் முழக்கம் செய்தவர் அப்பரடிகளே. மக்கள் முதலில் பயத்தில் இருந்து விடுதலையாக வேண்டும். பயத்திலிருந்து விடுதலையானலும் போதாது, மற்றவர்களை பயமுறுத்துகிற சூழ்நிலையிலிருந்தும் விடுதலையாக வேண்டும். ஆண்மை உணர்வுடனும் ஆன்மீகப் பொலிவுடனும் வாழவேண்டும். ஏங்கித் தவிக்காமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும். பிணியில்லா வாழ்க்கை பேரின்பத்துக்கு வித்து. என்றும் இன்ப உணர்வு பொங்கித்ததும்ப வாழ வேண்டும். இன்ப உணர்வு என்றல், நாம் அறியாமை வழிப்பட்ட உணர்வின் வழியதாக இன்பம் இது வென்றும் இன்பம் அது என்றும் மயங்கித் தவிக்கின்ற இன்பம் இன்பமாகா. எல்லாவிதமான பற்றுக்களில் இருந்தும் விடுதலை பெற்று, அமைதி பெறுகின்ற இன்பமே இன்பம். அந்த இன்பத்தையே வீடு என்பர் மேலோர். இக் கருத்துக்கள் மனப்புரட்சியை உண்டு பண்ணி மனித சமுதாயத்தை மாற்றக் கூடியவை தாமே; இத்தகு பெரும் புரட்சியைச் செய்த சமயப் பேரறிஞர்கள் சமயத் தத்துவ ஞானிகள் தமிழகத்தில் பலப்பலர் தோன்றினர் எனினும், தமிழ்ச்சமுதாயத்தினுடைய வலுவற்ற சூழ்நிலையும், அடிக்கடி ஊடுருவல் ஏற்பட்டதால் நிகழ்ந்த சலனங்களும் இத்தகு புரட்சியைத் தொடர்ந்து காப்பாற்ற முடியாமல் செய்து விட்டன. அப்பரடிகள் நெறியைப் போற்றிப் பேண வேண்டிய சமுதாயத்தினர் தங்களுடைய மரபின் பெருமை தெரியாமலேயே கொத்தடிமைகளாக—குறுகிய நிலையில் வாழ்கின்ற நிலையை எண்ணிப் பார்த்தால் நெஞ்சம் வேகிறது. அப்பரடிகள் நெறியைப் பேணித் தமிழ்ச் சமுதாயத்தை வளர்த்துப் பேண வேண்டிய திரு மடங்கள் கூடத்தம்முடைய பணியைச் செய்யாதிருப்பது வேதனையைத் தருகிறது.

இன்றையத் தமிழ் சமுதாயத்தினரும், தமிழ் இளைஞர்களும் உண்மை நிலைமையை உணர்ந்து மனப்புரட்சியைத் தந்து மனித சமுதாயத்தை வாழ்விக்கின்ற அப்பரடிகளின் அருள் நெறியைப் போற்றிப் பேணிப் பாதுகாக்க வரவேண்டும். குடியரசுத் தலைவரின் அறைகூவலை ஏற்று விடை சொல்லத் தமிழகத் திருமடங்களின் தலைவர்கள் திருத்தொண்டின் நெறி நிற்க வருவார்களா? அவர்கள் திருத்தொண்டு செய்ய வருவது அவர்கட்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது.;

தனிமரம்

எழுதியவர் :– 'மகிழ்மதி'

'தனிமரம் தோப்பாகாது' என்று கிராமங்களில் கூறுவது வழக்கம். இது சாதாரண வாக்கியமாகத் தோன்றினும், இதனுள் அடங்கியுள்ள கருப்பொருளும் உட்கருத்தும், மிகப்பெரிய ஒன்றுகும் சமயத்தின் அமைப்பு முழுவதையும், இந்த வாக்கியம் உள்ளடக்கியுள்ளது. செல்லும் வழியிலுள்ள, தனி மரம் ஒன்றினை எவரும் கண் கொண்டு பார்ப்பதில்லை. காரணம், எவர் கண்களுக்கும் அது தென்படுவதில்லை. அந்தத் தனி மரத்தோடு வேறுசில மரங்கள், அதனருகே வளரும் போது, அது பார்ப்பவர்களின் கண்களுக்கு பளிச் செனத் தெரியும். அதனையே தோப்பு, என்று கூறுவர். எனவே, தனிமரம் தனியாக வளர்ந்தாலுங்கூட, அவ் வளர்ச்சியின் பயனைப், பல மரங்களோடு, அது சேரும் போதுதான் அடைய முடிகிறது. அதுபோன்றுதான் தனிமனித வாழ்க்கையும், சமுதாய வாழ்க்கையும் வேறுபட்டுள்ளன. மனிதன் என்ற சொல்லுக்கு, ஏற்ற புகழும், பெருமையும் கிடைப்பது, அம்மனிதன் சமுதாயத்தில் சேர்ந்து வாழும போதுதான். தனிமனித வாழ்க்கையைப் பாலைவன வாழ்க்கையோடு ஒப்பிட்டால் சமுதாயவாழ்க்கையைச் சோலைவன வாழ்க்கைக்கு ஒப்பிடலாம்.

அண்ணன்-தம்பி தகராறு; கணவன்—மனைவி சண்டை; ஒரு வீட்டிற்கும் மற்றொரு வீட்டிற்கும் பகை; ஒரு சாதியாருக்கும், இன்னொரு சாதியாருக்கு மிடையே பூசல்; ஒரு பகுதிக்கும், பிறிதொரு பகுதிக்குமிடையே பிணக்கு; ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்குமிடையே இடைவிடாப் போர்—இவை அனைத்தையும் நாம் அனுதினம் பார்த்தும், படித்தும் வருகிறோம். காரணமின்றிக் காரியமில்லை. அதேபோல், இவை அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. அது தான், ஒருவரோடு ஒருவர் ஒத்துவாழாத நிலையும் விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையும் இல்லாததாகும்.

இன்று, சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதரனைவரும் சமுதாய எண்ணத்தோடு வாழ்கின்றார்களா என்பது ஐயப்பாடே. இருந்தபோதிலும் பெரும்பாலான மனிதர் இச் சமுதாய எண்ணத்துடன், சமுதாய நலத்தை எண்ணியே வாழ்ந்து வருகிறார்கள் என்று கருதலாம. ஆனால் சிலர் மட்டும் தெரிந்தோ தெரியாமலோ அறிந்தோ அறியாமலோ சமுதாயத்தில் வாழும் பிறமனிதர்களோடு ஒன்று சேர்ந்து ஒத்துவாழ மறுக்கிறார்கள். இன்னுஞ்சிலரால் ஒத்துவாழ முடியவில்லை. இங்கு சமுதாயம் என்று குறிப்பிடப் படுவது சமுதாயத்திலுள்ள பல்வேறு துறைகளையும் பணிகளையுந்தான் என்பது கவனத்திற்குரியது.

இதுபோன்று ஒரு துறையில் பணியாற்றும் ஒருவர், ஒத்து வாழத் தெரியாத-முடியாத காரணத்தால் இன்னல் பலவற்றிற்கு ஆளாக நேரிடுகிறது. வீட்டிலும் கூட குடும்பத்திலுள்ள உறுப்பினர்களனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்தால்தான் குடும்பம் மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்ததாய் இருக்கும். இதேபோல் எல்லா இடங்களிலும் ஆங்காங்குள்ள சூழ்நிலையை அனுசரித்து அதற்கேற்ப நடந்து சென்றால் தான் எல்லாம் அமைதியுடன் முடியும். உதாரணமாக பள்ளி ஒன்றை எடுத்துக்கொள்வோம். அப் பள்ளியிலே குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக்கு வருதல், சீரான உடை அணிந்து வருதல் ஆசிரியர்களிடம் அடக்கமாய் இருத்தல் போன்ற ஒழுங்கு விதிகள் இருக்கலாம். பள்ளிகளுக்கேற்ப சிலபல கட்டுத் திட்டங்கள் மாறுபடக் கூடும். அப்பள்ளியிலே வரும் மாணவன் அப்பள்ளிபற்றி அதன் சூழலைப் பற்றி அறிய முற்படவேண்டும்; அறிந்து அதற்கேற்பத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளல் வேண்

டும். "மனிதன், சூழ்நிலையை உருவாக்குகிறான். சூழ்நிலை மனிதனை உருவாக்குகிறது" இந்த வாக்கியங்கள் சமுதாய வாழ்க்கைக்குப் பொருத்தமாய் உள்ளன. எங்கு செல்கிறோமோ அங்கு நடைமுறையிலுள்ள சூழ்நிலையை சுற்றுப்புறத்தை அறிந்து, அதன்படி தன்னை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். மாற்றி அமைக்கத் தன்னால் முடியாது என்று கருதினால், தனக்கேற்ப சூழ்நிலையை மாற்றி அமைக்கும் ஆற்றல் இருக்குமேயானால் வேறுசூழ்நிலையை அமைத்துக் கொள்ளலாம். உலகில் வாழும் வன விலங்குகளும்நீர்வாழ்வனவும் பறப்பனவும் பிறவும்—சூழ்நிலைக்கேற்ப தங்களது வாழ்க்கையினை ஏற்றமுற எழிலுற அமைத்து இன்பமுடன் வாழும் போது ஆறறிவு படைத்த மனிதனால் வாழ முடியாதா? முடியும். அவ்வாறிருக்கச்சிலா ஏன் சமுதாயத்தோடு ஒட்டாமல்—ஒழுகாமல் தனியாக வாழ்ந்து வாழ்க்கையை மடித்துக் கொள்ளுகிறார்கள்? இதற்கு இரண்டே இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும். ஒன்று போதிய அனுபவமின்மை காரணமாய் ஏற்பட்ட அறியாமை; மற்றொன்று, தனக்கு எல்லாம் தெரியும் என்ற ஆணவம். முன்னதை, மற்றவர்களின் அறிவுரைகொண்டு நீக்கி விடலாம். பின்னதை, ஆணவத்தின் காரணமாய் அவரவர்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளாலும் துயரங்களாலும் கிடைக்கின்ற படிப்பினையைக் கொண்டு அவர்களாகவே நீக்கிக் கொள்ள வேண்டும். அல்லது மடிந்து போகநேரிடும்.

எத்தனை அளவு செல்வமிருந்தாலும்எவ்வளவுதான் படிப்பு இருந்தாலும் உடன்வாழும மனிதருடன் ஒத்து வாழாத மனிதர்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டுத்தான் வந்திருக்கிறார்களே தவிர அரவணைக்கப் பட்டதில்லை. இப்படிச் சமுதாயத்தோடுஒத்து வாழாத-கூடிவாழாத மனிதர்களைப் பார்த்துத்தான் வள்ளுவர் மிக அழகாகவும், வெகு தெளிவாகவும்

"உலகத்தோடு ஒட்ட
ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்று கூறிச் சென்றார்.

எனவே, மேற்கூறியவற்றால் மனிதன் மனிதனுக பெருமையுடனும் பூரிப்புடனும் வாழ்ந்து நாட்டிற்கும் உலகிற்கும் நல்ல பல பணிகள் புரிய ஒவ்வொரு மனிதனும் பிறரோடு—சமுதாயத்தோடு கூடிவாழ வேண்டுமென்பதை அறிந்தோம். இதனை ஒட்டியே 'கூட்டுறவு நாட்டுயர்வு' கூடி வாழ்ந்தால் கோடிநன்மை என்ற முது மொழிகள் நம் நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வந்திருப்பதைக் காண்கிறோம். ஆகவே தனி மரம் எப்படித் தோப்பாகக் கருதப்பட மாட்டாதோ, அதேபோல் தனிமனிதனும் சமுதாயமாகக் கருதப் பட மாட்டான். மரம் மரங்களோடு இருந்தால்தான் மரங்களுக்குரிய மதிப்பும் உயர்வும் கிட்டும். அதுபோன்றே மனிதனும் மனிதர்களோடு கூடி வாழ்ந்தால்தான் புகழும் பெருமையும் கிடைக்கும்.

சமயம் ஒன்றுதான் மனிதனைத் திருத்தும் சரியான சாதனமாகும்

1ம் பக்கம் தொடர்ச்சி

சகோதரத்துவத்தையும் மேலோங்கி நிற்கச் செய்யும்.

ஒரு நாடு ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவது அங்நாட்டின் ஆத்மீகத்துறை வளர்ச்சியைப் பொறுத்ததுதான். ஒரு நாடு ஒழுக்கக் கேட்டைடைந்துள்ளது என்பதற்கான அறிகுறி சட்டப் புத்தகங்களின் குவியல்தான்!

'சட்டம் ஒரு வலை; பெரிய வண்டுகள் அதில் மாட்டிக் கொள்வதில்லை; துளைத்துக் கொண்டு வெளி வந்து விடுகின்றன' என்று இங்கு குறிப்பிட்டார்கள். அப்படி வலையைப் பிய்த்துக் கொண்டு வெளியேறுகிறவர்கள் தாங்கள் வெளியேறுவது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக 10 சிறியவர்கள் மாட்டிக் கொள்ள வேண்டும் என்றும் எண்ணுவதுண்டு.

பொதுவாக கலப்படம் செய்வது என்பது குற்றம் அதற்கு உடந்தையாக இருப்பதும் குற்றம்: ஆனால், இவற்றிற் கெல்லாம் அடிப்படையாக கலப்படம் பண்ண எண்ணுவதைக் குற்றமாகக் கருதுவதில்லை. சட்டங்கள் முழு நிறைவுடையனவாகத் தோன்றி விடுவதில்லை. முழங்காலில் ஒரு புண் ஏற்பட்டால் அதன் மீது கட்டுப் போடுகிறோமே, அதுபோல் தான் சட்டத்தில் திருத்தங்கள் சேர்த்துக் கொள்வதும்.

சமயம் ஒன்றுதான் மனிதனைத் திருத்துவதற்குரிய சரியான சாதனம்; ஔவையார் தனது 'ஆத்திசூடி'யில் 'அறஞ் செய்' என்று கூட வலியுறுத்தவில்லை. 'அறஞ் செயவிரும்பு' என்றுதான் வற்புறுத்துகிறார். செயற்பாட்டைக் கூட அல்ல செயற்பாட்டிற்குரிய விருப்பத்தைச் சீர்ப்படுத்திச் செழுமைப்படுத்துவது சமயம். இதனைத்தான்,

எண்ணிய எண்ணியாங்
கெய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப்பெறின்

என்று பேசினார் திருவள்ளுவர்.

விண்ணோக்கிச் செல்லும் பொருளை மண்ணோக்கி இழுக்கும் ஈர்ப்புச் சக்தி மண்ணுக்கு இருப்பதுபோல வானோக்கிப் பறக்கிற மனிதனையும் கீழ் நோக்கி இழுத்து வருகிற ஆற்றல் வஞ்சனை, பொய், புனை சுருட்டு முதலிய வற்றிற்கு இருக்கின்றன. இத்தகு ஆற்றல் படைத்த வஞ்சனை, பொய், புனைசுருட்டு ஆகியவற்றின் ஆற்றலை அடக்கி மனிதனை மனிதனாக-மாமனிதனாக ஆக்கும் சக்தி மதத்திற்கும், கடவுள் நம்பிக்கைக்கும் உண்டு.

தன்னலமே இல்லாமல் இருக்கவேண்டும் என்றுகூட நான் கூற விரும்பவில்லை; தன்னலத்திற்கு ஓர் எல்லைக் கோடு இருக்க வேண்டும் என்பதுதான் என்கருத்து. அத்தகைய எல்லைக் கோட்டை வகுப்பதுதான் ஒழுக்கம். தனி மனிதர்களுக்கு மட்டுமல்ல— வணிகர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் இந்த ஒழுக்கம் இன்றியமையாதது.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்றார் திருவள்ளுவர். உழவுத் தொழில் உற்பத்தித் தொழில். களங்கம் ஏற்படுத்தவும் வாய்ப்பில்லாத தொழில். வாணிபத் தொழில் அப்படியல்ல-எளிதாகக் களங்கம் ஏற்படுத்திவிடக்கூடிய தொழில். வாணிபத் துறையை யொட்டித் தமிழகத்தில் இலக்கியங்களே தோன்றியுள்ளன. சிலப்பதிகாரத்தில் கோவலனின் குடிசசிறப்புக கூறப்பெறும் போது, வணிகச் சிறப்புப் பேசப்பெறுகிறது. பொருள் ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு மாற்றப்படும் போது ஓரிடத்தில் அதிகமாகச் சுரண்டப்படக் கூடாது.

காய்தலும், உவத்தலும், இன்றிப் பேசும் பண்பியல்பு அன்றிருந்தது. இன்று, யார் எதைப் பேசுவது என்ற

மனிதனை மனிதனாக ஆக்கும் சக்தி மதத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் உண்டு

ஆத்மார்த்தீக உலகிற்கும் வணிக உலகிற்கும் உறவுஏற்பட்டால் அன்பும் பண்பும் வளரும்

வரையறைகூட இல்லாமல் யாரும் எதையும் பேசுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

வணிகர்கள் பெரும்பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும். கலப்பில்லாத நல்ல பண்டங்களையே வழங்குவதன் மூலம் மக்களின் உடலையும் உயிரையும் பாதுகாக்கும் பாதுகாவலர்களாக வணிகர்கள் விளங்க முடியும். ஒழுக்கம், அன்பு இவற்றைக் கூட வணிகக் கடைகளில் கற்றுக் கொள்ளலாம். முகத்தால் அமர்ந்தினிது நோக்கும் பண்பு இன்று கடைகளில் தானிருக்கிறது. ஆத்மார்த்தீக உலகத்திற்கும் வணிக உலகத்திற்கும் உறவு ஏற்பட்டால் அன்பும் பண்பும், ஒழுக்கமும், நாணயமும் செழித்தோங்கி வளரும்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கையைவிட வணிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாகி இருக்கிறது. அது நல்லதல்ல — வணிகர்களின் எண்ணிக்கை குறையவேண்டும். இதுசம்பந்தமாக வணிக சங்கங்களே திட்டமிட்டு ஒரு நல்ல ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

நாட்டில் ஒழுக்கத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசுவார்கள். ஆனால் சிறிதளவுகூட வாழ்க்கையில் கடைப்பிடிக்க மாட்டார்கள். தனிமனித ஒழுக்கத்தைப் பெரிதுபடுத்திச் சமுதாய ஒழுக்கத்தை அலட்சியப் படுத்துவதால் ''சமுதாய ஒழுக்கம்'' சீர்குலைகிறது. சமுதாயநெறி தழுவிய வாழ்க்கை மலரவேண்டும்.

விலைவாசி ஏற்றம்பற்றிப் பேசப்படுகிறது. இம்மாதிரி நேரங்களில் விலையேற்றம் வரவேற்கத் தக்கதுதான். எனினும் விலைவாசி ஏற்றம் உற்பத்தி செய்கிறவனுக்குக் கிடைக்கவேண்டும்.

''வரி உயர்வினால் விலைவாசி உயர்ந்திருக்கிறது; இதற்கு வணிகர்கள் பொறுப்பில்லை'' என்று வணிகர்கள் கூறுகிறார்கள். இன்று, 60 சதவிகிதம் மக்களுக்கு, விலைவாசி உயர்வுக்கு ஏற்பச் சாமான்கள் வாங்கி வாழ்க்கை நடத்த வருமானம்இல்லை. தனிமனித வாழ்க்கையில் சோஷலிசப் பண்பு இல்லையானால் சமுதாயத்தில் சோஷலிச ஒழுக்கம் நிலைக்காது. அடிமைக் காலத்தில் நாம் பலவாறாகப் பிரிக்கப்பட்டோம். இன்று சுதந்திர நாட்டில் — சுதந்திர மக்களாக வாழ்கிறோம். நம்மிடையே, நாமெல்லாம் ''ஒரு குடும்பம்'' என்றபாசஉணர்வு வளரவேண்டும். வளர்ந்து வரும் புதிய சமுதாயத்திற்கு இந்த குடும்ப உணர்வு இன்றியமையாதது. வணிகர்களும் இந்த ''ஒரு குடும்ப'' உணர்வோடு சராசரிமக்களின் வாங்கும் சக்தியை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

வணிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் தினமும் சிட்டைப் புத்தகத்தைப் பார்த்துக் கணக்கு முடிப்பதுபோல ஒவ்வொரு நாளிலும், நாம் ஒழுக்கம், பண்பு ஆகியவற்றால் வளர்ந்திருக்கிறோமா என்று அன்றாடச்செயல்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யவேண்டும்.

ஆத்மீகமும் வாணிகமும் தாமரையும் தண்ணீரும் போல. நமது வாழ்க்கை, பொருள் முயற்சி, ஒழுக்கம் அனைத்திலும் ஆத்மீக வாழ்க்கை கலந்திருக்க வேண்டும்.

சாப்பிடுகிற மனிதனுக்குப் பசிநீங்கவேண்டும்; குளிக்கிற மனிதனுக்கு அழுக்கு நீங்கி, உடல்வெப்பம் தணிய வேண்டும். வழிபாடு செய்கிற மனிதனுக்கு உள்ளத்தில் உள்ள வெப்பக்காடு குறையவேண்டும். இதற்குத்தாய்மொழியில் வழிபாடு செய்வது இன்றியமையாதது. உள்ளத்தின் அழுக்கைப்போக்கி, வெப்பத்தைத் தணித்துத் தூய்மைப் படுத்தும் கோயில்களை வணிகத் துறையாக்கி விட்டால் நாம் எங்கேபோய் நமது உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள முடியும்? எங்கே போய், வெப்பத்தைத் தணித்துக் கொள்ளமுடியும்? ஒரு மனிதனின் அன்பும், கருணையும் உலகமக்களை அணைக்கும் போதுதான் அவன் ஆத்மார்த்தீக மனிதனாகிறான்.

வணிகத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், மக்கட்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பதுபோல— அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அன்பையும் பண்பையும் கற்றுக்கொடுக்க முடியும்; அரிசி விற்கும் கை அருளியலையும் விற்க முடியும் என்பதை வணிகப் பெருமக்கள் உணர்ந்து தொண்டுபுரிய முன்வரவேண்டும்.



தீவிபத்தால் வாழ்விழந்தோர்க்கு

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தினர் உடையும் பொருளும் வழங்கினர்

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் 26-3-63ல்பெரியார்மன்றத்தில் திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ. எல். டி. தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது, தவத்திரு அடிகளார் அவர்கள் "சமயமும் சமுதாயமும்" என்ற தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்,

17-3-62ந் தேதி ஈரோட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் வாழ்விழந்த குடும்பங்கட்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 20-ம் தேவையான துணிகளும் அடிகளார் மூலம் வழங்கப்பெற்றன.

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டம்

மாசபைக் கூட்டம்

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தின் மகாசபைக் கூட்டம் 26-3-63ல் திரு. எம். சண்முகசுந்தரம் இல்லத்தில் அருள்நெறித் தந்தை அவர்கள் முன்னிலையில் திரு. எம். கணபதி முதலியார் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. கே. சி. கந்தசாமி முதலியார் ஆண்டறிக்கைபடித்தார். 62-63ம் ஆண்டுக் கணக்குகள் பரிசிலனை செய்யப்பெற்று ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்னர் 1963-64ம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட அங்கத்தினர்களைக் கொண்ட செயற்குழு ஒன்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

தலைவர் திரு. கே. கே. அர்த்நாரி செட்டியார், உபதலைவர் திரு.எம். கணபதி முதலியார், செயலர் திரு. கே. சி. கந்தசாமி முதலியார், உதவிச் செயலர் திரு. டி. பழனியப்பன் திரு. எம். சண்முகசுந்தரம், பொருளாளர் திரு. எஸ். பழனிச்சாமி செட்டியார்,வழி நடத்தும் மேலாளர் எஸ். மீனாட்சிசுந்தர . முதலியார். உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். ஆறுமுகம் செட்டியார், வி. பி. நாச்சிமுத்து முதலியார், கே.அய்யாவு,கே.என். குருசாமி முதலியார், கே. என். ரத்தினம், வி. ஏ. வி. குப்புசாமி முதலியார். சி. முத்துசாமி, சி. அம்பாயிரம், எம். வெங்கட்ராம செட்டியார், வி. பி. சின்னப்ப கவுண்டர், திருமதி அ. வள்ளியம்மாள், திருமதி ந. பாக்கியம் ஆகியோர்.

ஆலத்தம்பாடி

ஆலத்தம்பாடி அருள்நெறி மன்றக் கிளை அமைப்புக் கூட்டம் 9-3-63ல் திரு. கே. டி. ரெங்கநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவாறு ஒரு செயற்குழு அமைக்கப் பெற்றது.

தலைவர் திரு. கே. இராமச்சந்திர நாயுடு, உபதலைவர் திரு ப. வ. தி. சக்கரவர்த்தி செட்டியார், செயலர் திரு. கே. டி. ரெங்கநாத முதலியார், உதவிச்செயலர் திரு. ஆ. ச. கணேசன், பொருளாளர் திரு. த. மகாலிங்கம், வாரவழிபாட்டுத் தலைவர் திரு. ராம. சாமிநாத படையாச்சி.

கொறுக்கை

கொறுக்கை அருள்நெறி மன்றக்கிளை அமைப்புக் கூட்டம் 20-2-63ல் சேவிகாடு திரு. ஆர். என். இராமச்சந்திர தேவர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவாறு ஒரு செயற்குழு அமைக்கப் பெற்றது.

தலைவர் திரு. டி. எஸ் சுப்பிரமணிய பிள்ளை, உபதலைவர் திரு. எம். பி. பக்கிரிசாமி பிள்ளை, செயலர் திரு. கே. நடராசன், உதவிச்செயலர் திரு. ஆர். என். இராமச்சந்திர தேவர், பொருளாளர் திரு. கு. கந்தசாமி பிள்ளை. ★

அடிகளார் சுற்றுப்பயணம்

9-4-63 கடலூர் (திருச்சி மாவட்டம்)
10-4-73 கொத்தட்டி (தெ.ஆ) பெண்ணுகடம்
11-4-63 விழுப்புரம் கச்சராயபாளையம் சின்னசேலம்
13-4-63 பல்லாவரம்

செய்திச் சுருள்

திருக்கோஷ்டியூர் கழக உயர்நிலைப் பள்ளி

திருக்கோஷ்டியூர் கழக உயர்நிலைப்பள்ளியின் இரண்டாவது ஆண்டுவிழா 23-3-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் திரு. பாலுச்சாமி சேர்வை அனைவரையும் வரவேற்றார். தலைமை ஆசிரியர் திரு. டி எஸ். ஜெயகரன் ஆண்டறிக்கை படித்தார். திரு. சுப. இராமநாதன் எம். ஏ.,திரு. சி திருஞானசம்பந்தம் ஆகியோர் பேசினார்கள். பள்ளி மாணவ மாணிவயரின் கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர், தேவகோட்டை கோட்டாட்சித் தலைவர் திரு. டி. பி. கருணாகரன் நாயர் பரிசுகள் வழங்கினார். திரு. ஜெயகரன் நன்றி கூறினார்.

நுங்கம்பாக்கத்தில் புலவர்திருநாளும் காந்தியடிகள் படத்திறப்பும்

நுங்கம்பாக்கம் மாநகராட்சி மன்ற ஆண்ககள் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின்சார்பில் 27-3-63ல் புலவர் திருநாளும் காந்தியடிகள் படத்திறப்பும் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்றார். காந்தியடிகளின் திருவுருவப்படத்தைத்தமிழக முதலமைச்சர்மேதகுகாமராசர் அவர்கள் திறந்து வைத்தார்கள். தவத்திருஅடிகளார்அவர்கள், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். தலைமை ஆசிரியர் நன்றி கூறினார்.

மகாதேவபட்டணம் கழக உயர்நிலைப்பள்ளி

மகாதேவபட்டணம் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியின் இலக்கியமன்ற 2-வதுஆண்டுவிழா 25-3-63ல் மன்னார்குடி ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவர் திரு. என் பாலசுப்பிரமணிய தேவர் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. வி. சுவாமிநாதன் அனைவரையும் வரவேற்றார். தவத்திரு அடிகளார் அவர்கள் தமிழின்பம் என்ற தலைப்பில் சிறந்ததொரு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். மன்னார்குடி ஊராட்சி கூட்டுமன்ற ஆணையர் திரு. பி. கருப்பணன், போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

செந்துறை மாவட்ட மன்ற உயர்நிலைப்பள்ளி

செந்துறை மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளியின் மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழா 28-3-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. ந. சுந்தரேசன் அனைவரையும் வரவேற்றார். கரந்தைக் கல்லூரி முதல்வர் வித்துவான் ந. இராமநாதன் 'இலக்கியக் காட்சிகள்' எனும் பொருள்பற்றிப் பேசினார்கள். தவத்திரு அடிகளார் அவர்கள் 'வள்ளுவமும் வரலாறும்' என்ற தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

கட்டுரைப் போட்டி

ஆத்தூர்த் தமிழ்ச் சங்கச் செயலாளர், புலவர் தி. பிச்சை அறிவிப்பதாவது:-

எங்கள் தமிழ்ச் சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா வினையொட்டிப் பேராசிரியர் திரு சி. நயினார் முகமது அவர்கள் 'பிச்சையம்மாள் நினைவுப் பரிசு' அளிக்க முன்வந்துள்ளார்கள். **'சங்க இலக்கியத்தின் சிறப்பு'** எனும் பொருள் பற்றி 20 பக்கங்களில் ஆராய்ச்சிக் கட்டுரையாக அமையும் முதலிரு கட்டுரைகளுக்கு முறையே ரூ. 75-ம், ரூ. 25-ம பரிசளிக்கப் பெறும். கட்டுரை அனுப்பும் கடைசி நாள் ஏப்ரல் 30. மேற்கொண்டுவிபரம்வேண்டுவோர் 8காசுஅஞ்சல்தலையுடன் கீழ்க்காணும்முகவரிக்குத்தொடர்பு கொள்ளவும். **செயலர், ஆத்தூர் தமிழ்ச் சங்கம். ஆத்தூர் அஞ்சல் - மதுரை மாவட்டம்.**

அப்பர் அளிக்கும் விருந்து

உயிர்போகுமுன்

எவ்வாறேனும் பொருளைச் சேர்ப்பதே வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதக் கூடாது; பொருளைத் தேடுவதற்காகப் பொய்யும் பித்தலாட்டமும் பேசுவது வெட்கங்கெட்டவர்கள் செய்யும் செயல். உடலை விட்டு உயிர் போய்விட்டால் பொய்யும், பித்தலாட்டமும் பேசிச்சேகரித்தப் பொருளை யார் அனுபவிப்பது? எனவே, அறவழியில் பொருளீட்ட வேண்டும்; உடலைவிட்டு உயிர் பிரிவதன் முன்பு காட்டுப்பள்ளியுள்ளானுகிய இறைவனின் திருவடி இன்பத்தைப் பெற்றனுபவியுங்கள் என்கிருர் அப்பரடிகள். இதோ பாடல்;

மாட்டைத்தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியுளான் கழல் சேர்மினே!

நசியனூர் பாரதி கல்வி நிலைய உயர்நிலைப் பள்ளி

நசியனூர் பாரதி கல்வி நிலைய உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழாவும், இலக்கிய மன்ற நிறைவு விழாவும் 26—3—63ல் ஈரோடு கலைமகள் கல்விநிலைய முதல்வர் திரு. எஸ். மீனுட்சி சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்வி நிலைய தாளாளர் திரு. சா. செ. செங்கோட்டு வேலப்பன் அனைவரையும் வரவேற்ருர். தலைமை ஆசிரியர் திரு. பி. விநாயகம் ஆண்டறிக்கை படித்தார். மாணவர்களின் ஓம்புவித்தல் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவற்றிற்குப் பிறகு தவத்திரு அடிகளார் அவர்கள் அரியதொரு சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்கள். மாநில கூட்டுறவு வீடு அடமான பாங்குத் தலைவர் திரு. இரா. கி. வெங்கடசாமி, அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினுர். தமிழாசிரியர் திரு. வெ. ந. வீரப்பன் நன்றி நவின்ருர்.

திருமணத்தின்போது திருக்குறட் பரிசு

தமிழர்களின் வீடுகளில் குறள் மணம் கமழவேண்டும். கல்யாணத்தின் போது, அண்டா, சட்டி முதலிய பாத்திரங்களை மணமக்கட்குக் கொடுப்பதுபோல், திருக்குறளையும் கொடுக்க வேண்டும்.

- அடிகளார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிந்தது. வான துந்துபிகள் முழங்கின. உம்பரும் முனிவரும் ஆரவாரம் செய்தனர் சிவகணங்கள் கூத்தாடின. அங்கிருந்த சுற்றத்தவர் எல்லாம் அச்சமுற்றுப் புனிதவதியாரைத் தொழுது அகன்றனர்.

பேய்வடிவம் பெற்ற புனிதவதியார் திருவருட்திறத்தால் 'அற்புதத்திருவந்தாதி' அளித்தருளினுர். ஆய்ந்த சீர் இரட்டைமணி மாலையும் பாடியருளினுர். அம்மையாரைக் கண்டோர் அனைவரும் வியப்புற்று அஞ்சி ஓடுவார்கள். கொண்டதோர் வேடத்தன்மையைப் பேசுவர். இவ்வாறு பேசுவதைக் கேள்வியுற்ற புனிதவதியார்,

''அண்டநாயகனுர் என்னை அறிவரேல் அறியா வாய்மை எண்டிசை மாக்களுக் கியான் எவ்வுருவாயென்?...'' என்பார். ஆம். வாய்மையறியா மாக்கட்கு அவர் எவ்வுருவாக விளங்கினுலென்ன?

சூலபாணியனுர் மேவும் படரொளிக்கயிலை வெற்பை — திருக் கயிலாயத்தைக்காண வேண்டும் என்ற பெருவேட்கை மீக்கூர, அவர் மனோவேகத்தினும் விரைந்து நடந்தார். கயிலையை அணுகினுர்; 'காலின் நடையினைத்தவிர்த்து பார்மேல் தலையினுல் நடந்து சென்ருர்.'

இவ்வாறு தலையினுல் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி மலையின்மேல் ஏறும்போது, 'சிலை நுதல் இமயவல்லி பெருவியப்புற்று சிவபெருமானை நோக்கி, ''தலையினுல் நடந்திங்கேறும் என்புடலின் அன்புதான் என்னே!' என்று கேட்டார்.''

''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்! உமையே இப்பெருமை சேர் வடிவையும் நம்மை வேண்டி பெற்ருள்'' என்றருளினுர் சிவபெருமான். (வளரும்)

'தமிழகம்' தரும்

புத்தாண்டுப் பரிசு

தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தோவியங்களையும், சொற்பொழிவுகளையும் தாங்கி வெளிவரும் தமிழகத்தின் ஆண்டுச் சந்தா ரூ 5. வருகிற புத்தாண்டுப் பரிசாகத் தமிழகத்தின் ஆண்டுச் சந்தாவை ரூ 3 ஆகக் குறைத்திருக்கிருேம். வருகிற சித்திரை முதல் நாளுக்குள் சந்தாக் கட்டுகிறவர்கள்

ரூபா மூன்று மட்டும்

கட்டினுல் போதும். ஓராண்டுக்குத் தமிழகம் தொடர்ந்து கிடைக்கும். இந்தப் புத்தாண்டுச் சலுகையை எத்தனைபேர் பெறப்போகிறீர்கள்? எங்கே பார்க்கலாம்!

......மேலாளர்......

'தமிழகம்'—குன்றக்குடி
(இராமநாதபுரம்மாவட்டம்)

★

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 1—4—63

குன்றக்குடி கூட்டுறவு லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி

கல்லல் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி துவக்கிவைத்தார்

குன்றக்குடி கூட்டுறவு லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டியை 15—3—63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் கல்லல் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி திரு. பி. துரைராசு அவர்கள் ஆரம்பித்து வைத்தார். மேற்படி சொசைட்டியின் தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் உபதலைவராக திரு. எஸ். நாராயணன் அவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள்,

ஒய். எம். கண்ணுச்சாமி அம்பலம் (பனங்குடி) வி. இராமசாமி செட்டியார் (சிராவயல்) கே. எஸ். இராமையா (செம்பனூர்) மு. வீரையா (குன்றக்குடி) இராம. கன்னையா (குன்றக்குடி) ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். ★

ஜெயங்கொண்டம் இளைஞர்காங்கிரஸ் பொதுக்கூட்டம்

ஜெயங் கொண்டம் இளைஞர் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 28—3—63ல் திரு. ரெ. அழகிரி தலைமையில் தேசப் பாதுகாப்புப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் ஆர். சுப்பிரமணியம், சிதம்பர வாகீசன் இராகோபால கிருஷ்ணன் ஆகியோர் பேசினர். பின்னர் தவத்திரு அடிகளார் அவர்கள், நேருஜியின் தலைமையைப் பாராட்டிவிட்டு. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விலை ஏற்றத்தைத் தடுக்க வேண்டும் என்றும் கூறினர்கள்.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.